# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை [1][இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்],

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,

எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,

சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை

ஆகியவற்றை எய்திடச் செய்யவும்,

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, [2][நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு] இவற்றை உறுதிப்படுத்தும்

உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

---

1. "இறையாண்மையும் மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக" என்பதற்கு, அரசமைப்புச் (நூற்பத்து இரண்டாம் திருத்தம்) சட்டம், 1976 இன் 2 ஆம் பிரிவினால் (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு), மாற்றாக அமைக்கப்பட்டது.
2. "நாட்டுமக்களின் ஒற்றுமை" என்பதற்கு, *மேற்படிச் சட்டத்தினால்* (3–1–1977 முதல் செல்திறம் பெறுமாறு), மாற்றாக அமைக்கப்பட்டது.